கொள்ளுகின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதைக் குறித்து, அவை முன்னவரையும் கலந்து 12 மணி அளவில் தெரிவிக்கின்றேன்.

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் அடிக்கடி மின்விளக்குகள் அணைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரி மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். அனுமதி கோருகின்ற அந்தக் கடிதத்தை அவர்கள் இப்பொழுது படிப்பார்கள்.

* **திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட பொருள்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன் :

"மதுரை எர்ஸ்கின் அரசாங்க பெரிய மருத்துவ மனையில் அடிக்கடி மின் விளக்குகள் அணைந்து விடுவதால், மருத்துவர்கள் செய்து கொண்டிருக்கும் ஆபத்தான அறுவை சிகிச்சைகளைத் திடீர் என நிறுத்தி மீண்டும் டார்ச் விளக்குகள் உதவியுடன் சிகிச்சையைச் செய்ய வேண்டியிருக்கின்ற நிலைமை பற்றி விவாதிக்க"

இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து மேற்கண்ட பொருளைப்பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், மின்சார விளக்குகள் அணைவதைக் குறித்து, இந்த வரவு-செலவுத் திட்டப் பொது விவாதத்தின்போதும், மருத்துவத் துறைநிதிக் கோரிக்கையின் மீது 6—7—1967 அன்றும், நிதி ஒதுக்கீடு மசோதாமீது 15—7—1967 மன்றும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

3. கவன ஈர்ப்பு—நூல் விலை ஏற்றமும் கைத்தறித் தொழில் நிலையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எல். ஆறுமுகம் அவர்கள், சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.